**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**<u>அசல் வழக்கு எண்.90/2015</u>**

நாள்: 13.02.2024

பெயர்: பாண்டியன் (வா.சா.1) த/பெ:மணி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை ...</u>

**1)** என் தந்தையுடன் பிறந்தவர்கள் 1) ராசாங்கம் (எ) கணபதி, 2) ராயர் (1ம் பிரதிவாதி) ஆவார்கள். இதில் மூத்தவர் எனது தந்தை என்றால் சரிதான். என் தந்தை 6 மாத காலத்திற்கு முன்பு காலமாகிவிட்டார். எனது சித்தப்பா ராசாங்கம் என்கிற கணபதி உயிருடன் உள்ளார். என் தந்தையும், அவரது சகோதரர்களுக்குமிடையே 1972 ம் ஆண்டு வாக்கில் பாகப்பிரிவினை ஏற்பட்டது. எங்கள் குடும்ப சொத்தாக சுமார் 2 1/2 ஏக்கர் இருக்கும். எனது தந்தை அவரது சகோதரர்களுக்கிடையே ஏற்பட்ட பாகப்படிதான் குடும்ப சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள்.

2) எனது சித்தப்பா ராசாங்கம் என்கிற கணபதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்டதை எனது மற்றொரு சித்தப்பா 1ம் பிரதிவாதி தாயார் கிரையம் வாங்கிவிட்டார் என்றால் சரிதான். தாவா சொத்தின் அமைப்புகளை காட்ட வரைபடம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சர்வே எண்.379 ற்கு புலவரைபடம் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண்.379/6 ன் முழு விஸ்தீரணம் 1 ஏக்கர் 8 சென்ட் என்றால் சரிதான். அது புதிதாக உட்பிரிவு செய்யப்பட்டதில் சர்வே எண்.379/6A. 6B, 6C, 6D என்று உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

3) தாவா சர்வே எண்.379/6A.ன் விஸ்தீரணம் 0.35.0 ஏர்ஸ் ஆகும். தாவா சொத்துக்கான கூட்டுப்பட்டாவில் 1ம் பிரதிவாதியின் பெயர் உள்ளது என்றால். **(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

ஒப்பம்/- திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.